

தேனி தெற்கு மாவட்டம் ஹைவேஸ் பேரூராட்சி தலைவராக நித்தியா பிரியா ஒரு மனதாக தேர்ந்தெடுக்கப்பட்டதையொட்டி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ.,வைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் மகாராஜன் எம்.எல்.ஏ., மாவட்டத் துணை செயலாளர் செந்தில், கம்பம் ஒன்றியச் செயலாளர் தங்கபாண்டி, பேரூர் ஹைவேஸ், செயலாளர் கணேசன், கம்பம் ஒன்றிய துணைச செயலாளர் மரியராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்.

### இந்தியா உலகின் முன்னணி நாடாக ரசாயன தொழிற்துறையில் உருவெடுக்கும் திறன் கொண்டுள்ளது!

# ரசாயன தொழில் துறையில் தொடரும் இறக்குமதி சார்புக்கு காரணங்கள் என்ன?

## மக்களவையில் கே.இ.பிரகாஷ் கேள்வி!

சென்னை, ஜூலை 29 -

இந்தியா உலகின் முன்னணி நாடாக ரசாயன தொழிற்துறையில் உருவெடுக்கும் திறன் கொண்டுள்ளது. இருப்பினும் ரசாயன தொழில் துறையில் தொடரும் import dependencyக்கு (இறக்குமதி சார்பு) காரணங்கள் என்ன?



இந்திய ரசாயன தொழிற்துறையில் குறிப்பாக MSMEகளுக்காக, இறக்குமதி சார்பை குறைத்து உலகளாவிய போட்டித்திறனை உயர்த்துவதற்காக, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D) ஆதரவு, Global Value Chain Integration Support, Technological Upgradation (தொழில்நுட்ப மேம்பாடு) மற்றும் Process Efficiency (செயல்முறை திறன் அதிகரிப்பு) ஆகியவற்றை மேம்படுத்த அரசு மேற்கொண்ட குறிப்பிட்ட நடவடிக்கைகள் என்னென்ன?

(Global Valuc Chain Integration Support MSMEகள் உலகளாவிய வாடிக்கையாளர்களுக்குப் பொருட்கள் வழங்க, சர்வதேச தரப்படுத்தல், தொழில்நுட்ப மேம்பாடு போன்றவை மூலம் ஆதரவு என்ன என்று மக்களவையில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ. பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.

**ஒன்றிய அரசின் பதில்** : இந்தியாவில் ரசாயனத் துறையில் இறக்குமதி சார்பிற்கான காரணங்கள் மூலப் பொருட்களின் பற்றாக்குறை, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க முயற்சிகளின் குறைபாடு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆதரவு (Research and Development Support), உலகளாவிய மதிப்புச்சுழற்சி ஒருங்கிணைப்பு (Global Value Chain Integration Support), தொழில்நுட்ப மேம்பாடு (Technology Upgradation), செயல்முறை திறன் அதிகரிப்பு (Process Efficiency) மற்றும் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களையும் (MSME) ஊக்குவிக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பின்வருமாறு: உயர்திறன் மையங்கள் (Centres of Excellence),

ரசாயன மற்றும் பெட்ரோ ரசாயனத் துறை யில் புதிய மூலக்கூறுகள் (Molecules) மற்றும் தொழில்நுட்பங்களை உருவாக்கும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கத்தில் ரசாயனத் துறை முக்கிய உயர்திறன் மையங்களை அமைப்பதற்கான ஒரு திட்டத்தை உருவாக்கியுள்ளது. இந்தத் திட்டத்தின் நோக்கம் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங் களுக்கு உதவித்தொகை (Grantsin aid) வழங்குவதன் மூலம் தற்போதுள்ள தொழில்நுட்பங்கள், பாலிமர்கள் (Polymers), ரசாயனங்கள் மற்றும் பிளாஸ்டிக்கை மேம்படுத்தவும் மற்றும் புதிய பயன்பாடுகளை உருவாக்கவும் உதவுவதாகும்.

இத்திட்டத்தின் முக்கிய அம்சம் தற்போதுள்ள உற்பத்தி செயல்முறைகளை நவீன மயமாக்குதல் & மேம்படுத்துதல் மற்றும் தயாரிப்புக'ளின் தரத்தை உயர்த்துதல். இந்த திட்டத்தின் கீழ் இந்திய அரசு மொத்த திட்டச் செலவின் 50% வரை நிதி உதவியாக வழங்குகிறது. அதிகபட்சமாக (ரூபாய் 5 கோடி வரையிலான வரம்புடன்) தற்போது வரை இந்தத் திட்டத்தின் கீழ் 18 உயர்திறன் மையங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இம்மையங்களை தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் ஆராய்ச்சி பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த மையங்களில் IITS, CSIR ஆய்வுக்கூடங்கள், CIPET உள்ளிட்டவை அடங்கும்.

அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சில் (CSIR):

அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சில் (CSIR) அதன் ஆறு துணை ஆய்வகங்கள் மூலம் இந்தியாவின் ரசாயனத் துறையை பலப்படுத்தும் பணியில் முக்கியப் பங்காற்றி வருகிறது. இத்துறை, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D), தொழில்நுட்ப மேம்பாடு, செயல்திறன் உயர்வு ஆகியவற்றில் ஆதரவளிக்கிறது. CSIR நிறுவனங்கள் மற்றும் (Start ups) சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுடன் நேரடி ஒத்துழைப்பில் ஈடுபட்டு, தொழில்நுட்ப உதவிகளை வழங்கி வருகின்றது. CSIR இதுவரை பல இறக்குமதி சார்பைக் குறைக்கும் தொழில்நுட்பங்களை உருவாக்கியுள்ளது. குறிப்பாக Medical Grade Oxygen, Biodiesel, Renewable BioMethane, And Eco Friendly Processing Systems. Specialty Chemicals, Battery Recycling, Corrosion And Crop Protection Techno logies களின் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும் CSIR, தொழில்துறைத் தேவைகளுக்கான AI சார்ந்த தொழில்துறை தீர்வுகள் மற்றும் Carbon Capture தொழில்நுட்பங்களை ஆய்வு செய்து வருகிறது. CSIR தொழில்துறை பங்குதாரர்களுடன் தொடர்பை மேம்படுத்தும் நோக்கில் வழக்கமான Workshops மற்றும் Outreach Programs, ஆகியவற்றையும் நடத்தி வருகிறது. இதன் மூலம், Climate Change, Energy Security மற்றும் Supply Chain Disruptions போன்ற முக்கிய சவால்களை அணுகும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பயோ டெக்னாலஜி துறையானது பயோ தயாரிப்பு முறைகளை ஊக்குவிக்கும் நோக்கில் "BioE3" என்ற கொள்கையை (Biotechnology for Economy, Environment & Employment) அறிமுகப்படுத்தி உள்ளது. இந்த முன்னெடுப்பின் ஒரு பகுதியாக, ரசாயனத் துறைக்குள் நிலையான பயோ தயாரிப்புக்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை (R&D) ஆதரிக்க பயோடெக்னாலஜி துறை முன்மொழிவுகளை (Proposals) வரவேற்கின்றது. இந்த அழைப்பின் முக்கியக் கவனம் , Bio Manufacturing Of BioBased Chemicals, Biopolymers And Active Bharmaceutical Ingredients (APIs) ஆகியவற்றை Production Strains பயன்படுத்தி உருவாக்கும் பயோ தயாரிப்பு முறைகளில் உள்ளது. இந்த முயற்சியில் கல்வி நிறுவனங்கள், Startups, தொழில் நிறுவனங்கள், பங்கேற்க ஊக்குவிக்கப்படுகின்றன. இந்த முயற்சியின் முக்கிய நோக்கம், இந்த துறையில் உயர் தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிப்பதும் வணிகமயமாக்கலும் ஆகும்.

MSME அமைச்சகம் : சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) அமைச்சகம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D) வளர்ச்சியை ஊக்குவித்தல், MSMEக்களை உலகளாவிய மதிப்புச் சுழற்சியில் இணைத்தல் (Global Value Chains), தொழில்நுட்ப முன்னேற்றத்தையும் செயல்திறன் மேம்பாட்டையும் ஊக்குவித்தல் ஆகியவற்றை குறிக்கோளாகக் கொண்டு பல்வேறு திட்டங்களையும் நிகழ்ச்சிகளையும் செயல்படுத்தி வருகிறது, குறிப்பாக ரசாயனத் துறைக்குள் MSME Champions Schemeஇன் கீழ் மூன்று முக்கிய துணைத் திட்டங்கள் உள்ளன:

MSME Innovative (Incubation, Design & IPR) Scheme ஆராய்ச்சி மற்றும் புதுமை நடவடிக்கைகளை ஆதரிக்கிறது.

MSME Competitive (LEAN Manufacturing Scheme) LEAN நடைமுறைகள் மூலமாக உற்பத்தித்திறன் மற்றும் தர மேம்பாட்டை ஊக்குவிக்கிறது.

MSME Sustainable (ZED Zero Effect Zero Defect) Certification Scheme சுற்றுச்சூழல் பாதிப்பு இல்லாத மற்றும் குறைபாடில்லா தரமான உற்பத்தியை ஊக்குவிக்கிறது.

மேலும், கீழ்காணும் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன,

MSE Scheme for Promotion and Investment in Circular Economy (MSESPICE) Circular பொருளாதாரத்தை முன்னேற்றும் முயற்சிகளை ஆதரிக்கிறது.

Micro and Small Enterprises Growth Innovation and Technolo gy (MSE GIFT) Scheme குறிப்பாக ரசாயனத் துறையில் செயல்படும் MSMEக்களின் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் செயல்திறன் உயர்வை ஊக்குவிக்கிறது என்று ஒன்றிய அமைச்சர் கூறினார்.



மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருமங்கலம் தொகுதியில் 1.50 லட்சம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவின் ஒரு பகுதியாக திருமங்கலம் நகரில் 2300 குடும்ப அட்டைதாரர்களுக்கு நலத்திட்ட உதவிகளை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் ஸ்ரீதர், கொ.தனபாண்டியன், ரம்யா முத்துக்குமார், பி.எஸ்.என்.எல். செல்வம், ஆதவன் அதியமான், மதன்குமார், தங்கப்பாண்டியன் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் மாநகராட்சி 12 வது வார்டில் மத்திய மாவட்ட துணைச் செயலாளர் சுரேஷ் ஏற்பாட்டில் மருத்துவ முகாம் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்று முகாமை துவக்கி வைத்தனர். உடன் சுரேஷ்,கோகுலவாணி,தினேஷ்,சுதா மூர்த்தி,,கந்தன்,சங்கர்,காசிமணி உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### அமைச்சர் - முனைவர் கோவி.செழியன் - சு.கல்யாணசுந்தரம் எம்.பி. பங்கேற்பு!

# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## தீர்மானங்களை விளக்கி மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

*தஞ்சாவூர் ஜூலை.29.*

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டம், மாவட்ட அவைத்தலைவர் க.நசீர்முகமது தலைமையில் சாக்கோட்டை அன்பு மஹாலில் நடைபெற்றது.

கூட்டத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், மு.மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, கும்பகோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், மாவட்ட கழக நிர்வாகிகள் க.நசீர் முகமது, கோவி.அய்யாராசு, எஸ்.துரைமுருகன், ஜெ.நடராஜன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தஞ்சை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர்கள் சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் முனைவர் செ. குறிஞ்சி வாணன் (திருவிடைமருதூர்), பி.எம். ஆனந்த் (பாபநாசம்), தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, மாநில சார்பு அணி நிர்வாகிகள் ஆடுதுறை மு.உத்திராபதி, இராம.விஜயன், மற்றும் ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க 'ஓரணியில் தமிழ்நாடு'" எனும் மாபெரும்முன்னெடுப்பை கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்ததை தொடர்ந்து மாநிலம் முழுவதும் குடும்பம் குடும்பமாக 2 கோடிக்கு மேற்பட்ட பொதுமக்கள் சமூக நீதியை காக்கும் ஜனநாயக பேரியக்கமான திமுகவில் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர். கழக தலைவர் அவர்கள் நிர்ணயம் செய்த உறுப்பினர் சேர்க்கை இலக்கினை, தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட திருவிடைமருதூர், கும்பகோணம், பாபநாசம் தொகுதிகளில் விரைந்து அதிகப்படியான உறுப்பினர்களைச் சேர்த்து நம்முடைய தஞ்சை வடக்கு மாவட்டத்திற்கு பெருமை சேர்க்க வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைப் பாதையில் தமிழ்நாடு அரசு மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டுக்காக "உங்களுடன் ஸ்டாலின்" என்ற புதிய திட்டத்தினை கழகத்தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்து, தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள், திட்டங்களை அவர்களின் இல்லங்களுக்கு அருகிலேயே சென்று வழங்கும் இந்த மாபெரும் திட்டத்தின் சிறப்பு முகாம் நடைபெறும் நாட்களில் பெருமளவில் பொதுமக்களை கலந்துகொள்ள செய்து பயனடைய வைக்க வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

தமிழ்நாட்டில் பல பல்கலைக்கழகங்களை உருவாக்கி, தமிழ்நாடு உயர்கல்வியில் உயரமடைய செய்து, நானிலமெங்கும் தமிழ்நாட்டினர் உயர் பொறுப்புகளில் பணியாற்று அடித்தளமிட்ட நவீனத் தமிழ்நாட்டின் சிற்பி காலத்தால் அழியாத உலகம் போற்றும் காவியத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில் கும்பகோணத்தில் 'கலைஞர் பல்கலைக்கழகம்' நிறுவுவதற்கான சட்டமன்றத்தில் நிறை வேற்றப்பட்ட மசோதாவை கிடைப்பில் போட்டுள்ள ஆளுநர் ரவி அவர்களுக்கு இக்கூட்டம் தனது கண்டனத்தை தெரிவித்து கொள்கிறது.

தமிழ்நாடு ரூ.1,96,309 என்ற தனிநபர் வருமான குறியீட்டின் மூலம் மாநிலங்களுக்கிடையே இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது. இந்தச் சாதனையானது, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில், 'எல்லார்க்கும் எல்லாம்'" என்ற உன்னத கொள்கையோடு செயல்பட்டு வரும் திராவிட மாடல் அரசின் தொலைநோக்கு திட்டங்கள், தொழில் வளர்ச்சி, முதலீடுகளை ஈர்க்கும் முயற்சிகள் மற்றும் மக்கள் நலத் திட்டங்களின் கிடைத்த வெற்றியாகும். இத்தகைய வெற்றியை ஈட்டி தந்த திராவிட நாயகன் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் பாராட்டி மகிழ்கிறது.

"I belong to the Dravidian stock" எனப் பேரறிஞர் அண்ணா முழங்கிய நாடாளுமன்ற மாநிலங்களவையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாதங்களை தமிழ்நாட்டின் உரிமைக்குரலை ஓங்கி ஒலித்த, திராவிடத் தூணாக முழங்கி விடைபெற்ற மதிமுக பொதுச்செயலாளர் வைகோ அவர்கள், சண்முகம் அவர்கள், எம்.எம். அப்துல்லா ஆகியோரது பணிகளை பாராட்டியும் எம்.பி., யாகத் தொடரும் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் அவர்கள், புதிய குரலாக ஒலிக்கவுள்ள கமல்ஹாசன் அவர்கள், எஸ். ஆர்.சிவலிங்கம் அவர்கள், கவிஞர் சல்மா ஆகியோரின் பணிகள் சிறக்க இக்கூட்டம் வாழ்த்துகிறது.

தஞ்சை வடக்கு மாவட்ட கழகப் பொறுப்பாளராக சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அவர்களை நியமனம் செய்த கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், கழக பொதுச் செயலாளர் அவர்களுக்கும், கழக துணை பொது செயலாளர் அவர்களுக்கும், முதன்மைச் செயலாளர் அவர்களுக்கும், கழக அமைப்புச் செயலாளர், துணை அமைப்புச் செயலாளர்கள் அவர்களுக்கும், கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இக்கூட்டம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநகர - ஒன்றிய - பகுதி பேரூர் கழகங்களில் பொது உறுப்பினர் கூட்டம் நடத்துவது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் பாகத்திற்கு ஒரு இளைஞர் அணி நிர்வாகி பட்டியலை, இளைஞர் அணி அமைப்பாளர்களிடம் விரைந்து ஒப்படைக்குமாறு இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ஏ. அண்ணாதுரை**

**ஜூலை 29 (2014)**



**வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியக் கழகச் செயலாளராக ஆறு முறையும் – திருப்பத்தூர் ஒன்றியக்குழுத் தலைவராக இரண்டு முறையும், மாடப் பள்ளி கூட்டுறவு சேவை சங்கத் தலைவராக இரண்டு முறையும் பொறுப்பேற்று திறம்பட பணியாற்றியவர்.**

**நெருக்கடிநிலையின்போது கைது செய்யப்பட்டு மிசா கைதியாக சிறையில் இருந்தவர். மொழிப் போராட்டம், இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து அறப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**